# மெட்ரோவில் 18 லட்சம் பேர் பயணம்

**சென்னை, ஆக. 3–**

சென்னை மெட்ரோ ரயில்களில், ஜூலையில் மட்டும், 18.46 லட்சம் பேர் பயணித்துள்ளனர்.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனமான சி.எம்.ஆர்.எல்., வெளியிட்ட அறிக்கை:

கொரோனா ஊரடங்கு தளர்வு காரணமாக, 50 சதவீத இருக்கை வசதியுடன், ஜூன், 21 முதல் மெட்ரோ ரயில் இயங்க துவங்கியது.

அன்று முதல் ஜூலை 31 வரையிலான காலத்தில், 22.02 லட்சம் பேர் பயணித்தனர். இதில், ஜூலையில் மட்டும், 18.46 லட்சம் பேர், மெட்ரோ ரயில் சேவையை பயன்படுத்தி உள்ளனர்.

ஜூலை, 26ல் அதிகபட்சமாக, ஒரே நாளில், 74 ஆயிரத்து, 380 பேர் பயணித்துள்ளனர்.

இவ்வாறு, அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.